**இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு - 2015**

-----------------------------------------------------------------------------------------

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 27 ஆம் இலக்க சட்ட உதவிச் சட்டத்தின் 23(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது பாதகமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் சீராக்கப்படுமாயின் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களிலுள்ள பல மூலதாரங்கள் பொருண்மையாகப் பாதிக்கப்படலாம்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 பாதகமான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக சட்ட உதவி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவிற்கு கிடைக்கும் அரச மானியங்கள் திரட்டு நிதியத்தின் கீழ் கணக்கு வைக்கும் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது. இந்த நிதியங்களைப் பயன்படுத்தி மூலதன தன்மையில்லாத கட்டிட பழுதுபார்த்தல்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 20,637,571 செலவினம் கட்டிடமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், இந்தக் கட்டிடங்களின் சட்டரீதியான உரித்து ஆணைக்குழுவிடம் இருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு உதவி பிரதிநிதிகளிடமிருந்து ஆணைக்குழுவிற்கு கிடைத்த நிதி உதவிகளைப் பயன்படுத்தி 06 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்டங்களுக்குரிய காசு பெறுவனவுகள் மற்றும் செலவினம் ஆணைக்குழுவில் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம், அரச நிறுவனமொன்றான ஆணைக்குழுவிற்கு பிரதிநிதிகளிடமிருந்து பெறப்பட்ட பணத்தின் அளவு, மேற்கொண்ட செலவினம் மற்றும் எஞ்சியுள்ள பணம் தொடர்பில் கணக்காய்வின் போது பரிசீலிக்க முடியாதிருந்தது. எவ்வாறெனினும், இந் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்திய அலகிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ஆணைக்குழுவிற்கு ரூபா 166,349,463 தொகை கிடைத்துள்ளதாக வெளிப்படுத்தப்பட்டது.

(இ) 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 63,056 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட தொலைக்காட்சி இயந்திரத்தின் பெறுமதி அந்த ஆண்டில் கட்டிடக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்ட வழு பேரேட்டுப் பதிவொன்றினூடாக திருத்தப்பட்டுள்ளபோது, மீண்டும் மீளாய்வாண்டில் கட்டிடக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு அலுவலக உபகரணங்கள் கணக்கிற்கு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையின் காரணத்தால் அலுவலக உபகரணங்கள் கணக்கு மற்றும் கட்டிடங்கள் கணக்கு ஆகியன முறையே அந்தப் பெறுமானத்தால் அதிகரித்தும் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

## 2.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரவை, அரச நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியால் குறிப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நலன்களை மாத்திரம் தமது கட்டுப்பாட்டுச் சபைகளின் அங்கீகாரத்துடன் தமது ஊழியர்களுக்கு செலுத்த முடியுமெனினும், அவ்வாறானதொரு அங்கீகாரமின்றி கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் தனியார் காப்பீட்டு முறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டு ஆணைக்குழுவினால் அதற்காக 50 சதவீதமான செலவினத்தை ஏற்பதற்கு இணக்கப்பாடு காணப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டினுள் தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றிற்கு சபையின் பங்களிப்பாக ரூபா 1,141,595 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 210(2) இன் பிரகாரம் கொடுப்பனவுகளை தாமதப்படுத்தியமையின் அடிப்படையில் ஏதேனுமொரு கட்டணத்தை செலுத்த நேர்ந்தால் அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட முடியுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், ஊழியர் நம்பிக்கைப் நிதியப் பங்களிப்பு உரிய தினத்தில் செலுத்தாமையால் தண்டப் பணமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 17,070 தொகையை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் நிதிசார் விளைவுகள் ரூபா 5,854,116 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 11,365,134 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,511,019 ஆன அதிகரிப்பொன்றினைக் காணக்கூடியதாக இருந்தது. வெளிநாட்டு பிரதிநிதித்துவ நிறுவன உதவிகள் மற்றும் ஆணைக்குழுவில் உழைக்கும் வருமானம் ரூபா 12,881,686 இனால் குறைவடைந்து, அலுவலக மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 9,082,123 இனால் அதிகரித்திருந்த போதிலும், அரச மீண்டெழும் மானியம் ரூபா 27,460,000 இனால் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுத்தாராய்ந்து பார்க்கும் போது 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையிலும் நிதி விளைவுகளில் பற்றாக்குறையொன்றினைக் காணக்கூடியதாக இருந்ததுடன், அது வருடாந்தம் தளம்பலடைந்திருந்தது. எவ்வாறெனினும ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை கருத்திற் கொள்ளும் போது ஆணைக்குழுவின் பங்களிப்பானது 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையிலும் சாதகமான பெறுமதியொன்றினைக் கொண்டிருந்ததுடன், அது தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. அதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 56,044,832 ஆக இருந்த பங்களிப்பானது மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 142,660,619 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### செயலாற்றல்

1978 இன் 27 ஆம் இலக்க சட்ட உதவி அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் உதவி கிடைக்க வேண்டிய நபர்களுக்கான சட்ட ஆலோசனைகள், அந்த நபர்களுக்காக மற்றும் பதிலாக வழக்கு பணிகளை நடாத்திச் செல்வதற்கான நிதியங்கள்,

அவர்களுக்காக வாதாடுவதற்கான சட்டத்தரணியின் சேவைகள், அந்த நடவடிக்கைகளை தொடர்வதற்கு தேவைப்படக்கூடிய ஏனைய உதவிகளை ஒழுங்கமைப்பதற்காக செயற்திறனான சட்ட உதவி உத்தேச முறைமையொன்றினை இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் நோக்கமாவதுடன் இந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இலங்கை முழுவதும் 77 நிலையங்கள் தாபிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையங்களினதும் ஒட்டுமொத்த செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) செயற்திறனான சட்ட உதவி உத்தேச முறைமையொன்றினை நடைமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாகியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 7,465 நீதிமன்ற வழக்குகளைத் தீர்ப்பதற்காக சட்டத்தரணியின் உதவி வழங்கப்பட்டிருந்ததுடன், தீர்க்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை 23,609 ஆகும். 77 பிராந்திய நிலையங்களில் 65 நிலையங்களின் வழக்குத் தீர்க்கும் செயற்திறன் 40 சதவீதத்தை விடக் குறைவானதாகும். தீர்க்கப்படாத 23,609 வழக்குகள் 6 வழக்குப் பிரிவுகளின் கீழ் 10 வருடங்களைக் கடந்திருந்த 47 வழக்குகளும் 18 வழக்குப் பிரிவுகளின் கீழ் 5 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் இடைப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 5,068 உம் 18 வழக்குப் பிரிவுகளின் கீழ் 1 முதல் 4 வருடங்களுக்கு இடைப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 10,516 ஆகும்.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் ரூபா 575,000 செலவிடப்பட்டு 30 பிரதேச அலுவலகங்களைப் பரீட்சிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 05 நிலையங்களை மாத்திரம் பரீட்சிப்பதற்காக ரூபா 51,081 செலவிடப்பட்டிருந்தது.

(இ) சட்ட உதவிகள் அதிகாரச்சட்டத்தின் 4 (ஆ) இன் பிரகாரம் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பிராந்திய நிலையங்களை தாபித்தல் ஆணைக்குழுவின் பணியொன்றாக குறிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டினுள் 11 புதிய பிராந்திய நிலையங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 22,000,000 மதிப்பிடப்பட்டிருந்ததெனினும், நிர்மாணம் இடம்பெற்றிருக்காததுடன் 07 அலுவலகங்கள் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட கட்டிடங்களில் நடாத்திச் செல்லப்பட்டு அதற்காக ஆண்டினுள் ரூபா 774,000 செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 நிதியங்களின் குறைவான பயன்பாடு

ஆணைக்குழுவினால் பேணிச்செல்லப்படும் நடைமுறைக் கணக்கில் ஆண்டு முழுவதும் ஆகக் குறைந்த மீதியாக ரூபா 12.5 மில்லியன் தொகை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன், அதனை குறுங்கால முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

ஆணைக்குழுவிற்குச் சொந்தமான பெறுமதி இனங்காணப்படாத தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் 196 உருப்படிகள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்று களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க மற்றும் 2006 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 28(ii) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்க நிரந்தர, அமைய அல்லது வேறு ஏதேனுமொரு அடிப்படையில் ஊழியர்களை ஆட்சேர்த்தல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரத்துடன் மாத்திரம் இடம்பெற வேண்டும். எனினும், அதற்கு முரணாக ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டில் அமைய அடிப்படையில் 26 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு

அவர்களுக்கான சம்பளம், ஊழியர் நலன்புரி நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பாக ரூபா 2,090,158 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதிடப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினத்துடன் இணக்கம் செய்யும் போது, 17 சதவீதம் முதல் 253 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சீராக்கங்களை பதிவு செய்யும் போது முறையான அங்கீகாரத்துடன் பேரேட்டு கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிராமை. |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிராமை. |
| (இ) | நிதிக் கட்டுப்பாடு | நிதியங்கள் முறையாகப் பயன்படுத்தப்படாமை. |